## பாஸ்கா திருவிழிப்பின் நான்காம் ஞாயிறு

*வாசகங்கள்:திருத்தூதர் பணி*

*2:14, 36–411 பேதுரு 2:20–25 யோவான் 10:1–10*

### வாழ்த்து

**நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அருளும், பிதாவாகிய தேவனின் அன்பும் பரிசுத்தஆவியின் நிறைவான ஆசீர்வாதமும் உங்கள் அனைவருடனும் இருப்பதாக.**

### முன்னுரை

சில ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு இனிய காலைப் பொழுதில், நான் ஒரு சிறிய கிராமத்தில் உள்ள ஆட்டு பண்ணைக்கு சென்றிருந்தேன். அந்த நேரத்தில் தரை முழுவதும் பனித்துளிகள் விழுந்து மின்னிக் கொண்டிருந்தன; சூரியன் மெதுவாக தனது ஒளியை பரப்பத் தொடங்கியிருந்தான்.

அங்கு ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்தபோது, ஒரு குட்டி ஆடு கூட்டத்திலிருந்து விலகி, ஒரு குறுகிய வேலிக்குள் சிக்கிக் கொண்டது.

அதன் தாய் ஆடு பதற்றத்துடன் கத்திக் கொண்டு அதைச் சுற்றிச் சுற்றி வந்து வருந்திக் கொண்டிருந்தது. அப்போது அந்த விவசாயி அமைதியாக அருகில் வந்து, கீழே குனிந்து, வேலியின் கதவை மெதுவாகத் திறந்தார். உடனே அந்த குட்டி ஆடு விடுதலை பெற்று தாயின் அருகில் ஓடி தாயுடன் சேர்ந்தது. தாய் ஆட்டின் கலக்கம் உடனே அமைதியாக மாறியது.

இந்தச் சிறிய நிகழ்வு என் உள்ளத்தில் ஆழமாக பதிந்தது.

நம் வாழ்க்கையிலும் பல நேரங்களில் நாம் அலைந்து திரிந்து, பயம், கவலை, குற்ற உணர்வு போன்ற “கட்டுப்பாடுகளின் வேலிகளில்” சிக்கிக் கொள்கிறோம்.

ஆனால் நம் நல்ல மேய்ப்பரான கிறிஸ்து, நம் ஒவ்வொருவரையும் பெயரிட்டு அழைக்கிறார். நம்மை கட்டிப்போடும் எல்லைகளை அவர் திறந்து வைத்து, அமைதியும் பாதுகாப்பும் நிறைந்த வாழ்வின் பசுமை மேய்ச்சலுக்குள்

நம்மை வழிநடத்துகிறார்.

இன்று நாம் ஒன்று கூடி ஜெபிக்கும் இந்த ஆலயம், ஒரு பாதுகாப்பான தங்குமிடமாகவும், திறந்த வாசலாகவும் திகழ்கிறது. இங்கு நாம் நம் மேய்ப்பரின் குரலைக் கேட்கிறோம்; ஆன்மிக உணவைப் பெறுகிறோம்; அன்பில் அவரைப் பின்பற்றக் கற்றுக்கொள்கிறோம்.

ஆனால் இந்த அழைப்பு ஆலயத்துக்குள் மட்டுமே முடிவடைவதில்லை.

அந்த குட்டி ஆடு வெளிப்புற மேய்ச்சலுக்குச் செல்லுவது போல், நாமும் இந்த திருப்பலியில் பெறும் அருளை உலகிற்கு எடுத்துச் செல்ல அழைக்கப்படுகிறோம்.

நாம் சந்திக்கும் ஒவ்வொருவரிடமும் அன்பையும், நம்பிக்கையையும், வாழ்வையும் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

இந்நாளில், நல்ல மேய்ப்பரான கிறிஸ்துவின் அருளையும், அவர் அளிக்கும் நிறைவான வாழ்வையும் தியானிக்கும் நாம், நமது இதயங்களை முழுமையாக அவருக்குத் திறப்போம். அவரின் குரலை கவனமாகக் கேட்போம்; அவரின் வழிகாட்டுதலை உறுதியாக நம்புவோம்; அவர் எங்கு வழிநடத்தினாலும், உண்மையுடன் அவரைப் பின்பற்றத் தயாராக இருப்போம்.

## திருப்பலிக்கான மறையுறை

"உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்:

ஆடுகளுக்கான வாயில் நானே" "நானே ஒரு நல்ல மேய்ப்பனின் குரல்"

அன்பான சகோதர சகோதரிகளே,

சில ஆண்டுகளுக்கு முன், ஒரு கடும் வெப்பம் நிறைந்த சனிக்கிழமை மாலை, நான் தேவாலயத்திற்குள் நுழைந்தேன். வெளியிலிருந்த வெப்பம் உடலை சோர்வடையச் செய்திருந்தது.

ஆனால் ஆலயத்திற்குள் வந்தவுடன் ஒரு இனிய குளிர்ச்சியும் அமைதியும் என்னை சூழ்ந்து கொண்டது.

அமைதியாக அமர்ந்து இறைவார்த்தையை தியானிக்க நினைத்தேன்.

அப்போது திடீரென ஒரு பறவை திறந்த ஜன்னல் வழியாக உள்ளே பறந்துவந்தது.

நீங்களும் இப்படியான ஒரு அனுபவம் பெற்றிருக்கிறீர்களா?

அந்தப் பறவை தேவாலயத்துக்குள் சுற்றித் திரிந்தது. வெளியேற முயன்று வெளிச்சமான கண்ணாடி ஜன்னல்களில் மோதிக் கொண்டே இருந்தது. கதவுகள் திறந்திருந்தும், அவற்றை அதனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

அதைப் பார்த்தபோது எனக்குள் ஒரு சிந்தனை எழுந்தது

இது சுதந்திரத்திற்கும் சிறைக்கும் இடையில் சிக்கித் தவிக்கும் ஒரு உயிர்.”

அன்பானவர்களே நாமும் பல நேரங்களில் இப்படித்தான் இருக்கிறோம். குற்ற உணர்வு, பயம், மன அழுத்தம், தேவையற்ற கட்டுப்பாடுகள் இவைகளின் நடுவில் சிக்கித் தவிக்கிறோம்.

அப்படிப்பட்ட தருணங்களில் இயேசுவின் வார்த்தைகள் நமக்கு ஒளி தருகின்றன

“நானே வாயில். என் வழியாக உள்ளே செல்லும் ஒருவர் இரட்சிக்கப்படுவார்; அவர் உள்ளும் புறமும் சென்று மேய்ச்சலைக் காண்பார்; நிறைவான வாழ்வைப் பெறுவார்.”

சுதந்திரம் தரும் கதவு

இயேசுவின் காலத்தில் மக்கள் பல விதமான சட்டங்களாலும் கட்டுப்பாடுகளாலும்

அடிமைப்படுத்தப் பட்டிருந்தனர்

ஓய்வு நாளில் சிறிது தூரம் நடப்பதற்குக் கூட தடைகள் இருந்தன.

நோயாளியை குணப்படுத்துவது கூட குற்றமாகக் கருதப்பட்டது.

சுதந்திரம் அளிக்க வேண்டிய கட்டளைகள், சிறையாக மாறின.

அந்தச் சூழலில் இயேசு அறிவிக்கிறார்: “நானே வாயில்; என் வழியாக சென்றால நீங்கள் உண்மையான சுதந்திரத்தை அடைவீர்கள்.”

பாஸ்கா நாளில் சீடர்கள் பயத்தால் கதவுகளை மூடிக் கொண்டு உள்ளே இருந்தனர்.

ஆனால் இயேசு அங்கு வந்து,“சமாதானம் உங்களோடு இருக்கட்டும்” என்றார்.

அந்தச் சொற்கள் கதவுகளை திறந்தன; அதைவிட முக்கியமாக, அவர்களின் இதயங்களையும் திறந்தன.

அன்பானவர்களே கிறிஸ்தவ வாழ்க்கை கட்டுப்பாடுகளின் வாழ்க்கை அல்ல. அது அன்பிலும் மன்னிப்பிலும் சுதந்திரமாக வாழும் வாழ்க்கை.

கதவின் – பாதுகாப்பும் வழியும்

ஒரு கதவு இரண்டு முக்கிய பணிகளைச் செய்கிறது:

- பாதுகாப்பை அளிக்கிறது
- புதிய வழியைத் திறக்கிறது

இயேசு நமக்காக இப்படிப்பட்ட கதவாக மாறுகிறார்

அவர் நம்மை பாதுகாக்கிறார்; அதே சமயம் புதிய வாழ்க்கைக்குள் நுழைய நம்மை அழைக்கிறார்.

அவர் கூறுகிறார்: “என் ஆடுகள் என் குரலை அறிகின்றன.”

அவரது குரல்:

- பயமுறுத்தும் குரல் அல்ல – உயிர் தரும் குரல்
- அழிக்கும் குரல் அல்ல – உருவாக்கும் குரல்
- சுயநலமற்ற அன்பால் நிரம்பிய குரல்

அன்பின் சக்தி

ஒரு பெண்ணின் அழகான தோட்டம் களைகளால் மூடப்பட்டு பாழடைந்தது.அந்த தோட்டத்திற்க்கு உயிரூட்ட முயன்ற பல முயற்சிகளும் பயனளிக்கவில்லை.

ஒரு நாள் அவளது சிறிய பேரக்குழந்தை வந்து மகிழ்ச்சியுடன் புதிய விதைகளை விளையாட்டாக விதைத்தது. அந்தச் சின்ன அன்பு தோட்டக்காரியின் இதயத்தை மாற்றியது. அவள் மீண்டும் முயன்று தோட்டத்தை அழகாக மாற்றினாள்.

அன்பானவர்களே நமக்கு விதிக்கப்பட்ட கட்டளைகள் செய்ய முடியாததை அன்பு செய்து முடிக்கிறது. அதுவே இயேசுவின் அன்பு வழி.

நல்ல மேய்ப்பன்

இயேசு கதவாக மட்டுமல்ல, நல்ல மேய்ப்பனாகவும் இருக்கிறார். அவர் தமது ஆடுகளை பெயர் சொல்லி அழைக்கிறார்.

ஒரு இளைஞன் வாழ்க்கையில் ஒரு முக்கியமான முடிவு எடுக்க வேண்டியிருந்தது. அவன் அமைதியாக ஜெபித்தான். அப்போது ஒரு மென்மையான குரல் அவனை வழிநடத்தியது.

பின்னர் அவன் சொன்னான்:

“சத்தமான குரல் அல்ல; அமைதியான குரல்தான் என்னை சரியாக வழிநடத்தியது.”

அதுவே இயேசுவின் அன்பு குரல்.

நிறைவான வாழ்க்கை

இயேசு தரும் வாழ்க்கை பணத்தாலும் செல்வத்தாலும் வாங்க முடியாதது. அது:

- அன்பு செய்வது
- மன்னிப்பது
- சேவை செய்வது
- இறைவனோடு உறவு கொள்ளுவது

ஒரு முதியவர் பல ஆண்டுகள் மனத்தஆங்கல் கொண்டிருந்த தனது சகோதரியுடன் சமாதானமானார்.

அந்த ஒரு செயல் அவருக்கு ஆழ்ந்த அமைதியையும் நிறைவையும் தந்தது.

அதுவே உண்மையான வாழ்க்கை.

திருச்சபை

– பாதுகாப்பும் பணியும்

நாம் ஆலயத்திற்குள் வருகிறோம்; அது பாதுகாப்பான இடம். ஆனால் அதுவே இறுதி இலக்கு அல்ல.

இயேசு கூறுகிறார்:

“அவர்கள் உள்ளும் புறமும் சென்று மேய்ச்சலைக் காண்பார்கள்.”

அதாவது:

- ஜெபத்திலிருந்து செயலில்
- அமைதியிலிருந்து பணியில்
- ஆலயத்திலிருந்து உலகச் சேவைக்கு

நாமும் மற்றவர்களுக்கு “வாயில்” ஆக அழைக்கப்படுகிறோம்.

எப்படி?

- ஒரு நல்ல வார்த்தை மூலம்
- அன்புடன் கேட்பதன் மூலம்

- மன்னிப்பின் மூலம்

நம்மால் ஒருவரின் வாழ்க்கைக்கே ஒரு கதவாக மாற முடியும்.

இறுதிச் சிந்தனை

அன்பானவர்களே, நாம் தேடும் பொக்கிஷம் வெளியிலில்லை.
அது இயேசுவில் உள்ளது.

அவர் தான் வாயில். அவர் தான் நல்ல மேய்ப்பன்.

அவரது குரலைக் கேட்டு அவரைப் பின்பற்றுவோம். அவர் தரும்
நிறைவான வாழ்வை இன்றே அனுபவிப்போம்.

ஒருநாள் அவர் நம்மை பெயர் சொல்லி அழைக்கும் போது,
அவரது குரலை அறிந்து நாமும் நிரந்தர வாழ்விற்குள்
நுழைவோம்.

ஆமென்.

Prepared by: **Fr. Paul Julian,** Perth ,Australia

and Translated by: **Leonard Arulandhu,** Holy Family Church, Chennai